

වාර්ෂික වාර්තාව
ஆண்டறிக்கை
Annual Report

2020

ජාතික විද්‍යා හා තාක්ෂණ කොමිෂන් සභාව


தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு

National Science and Technology Commission

NASTEC

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு

ஆண்டறிக்கை 2020



ஒப்புகைகள்

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு வசதிகள் மற்றும் நிதி உதவி வழங்கியமைக்காக தொழில்நுட்ப அமைச்சு மற்றும் திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கு முகாமைத்துவம் அதன் நன்றியைத் தெரிவிக்கின்றது. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் செயற்பாடுகளை மேற்கொள்வதில் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கும் உதவிகளுக்கும் ஆணைக்குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் ஆணைக்குழுவின் அலுவலர்களை பாராட்டுகின்றனர்.

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு பற்றி

இலங்கை அரசாங்கத்திற்கு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கருமங்கள் மீதான கொள்கைகளை வகுக்கின்ற மற்றும் ஆலோசனை வழங்கும் உச்சமட்ட அமைப்பாக தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு பதவிகுறிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழு. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு சனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற ஏழு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.



அமைவிட முகவரி

6ஆம் மாடி, தொகுதி D, "செத்சீபாய" கட்டம் II, பத்தரமுல்ல

தொடர்புகொள்வதற்கான தகவல்கள்



011- 2186711



011- 2186713



info@nastec.gov.lk



www.nastec.gov.lk



இலங்கை வங்கி, ஹைட்பார்க்



கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தினைக்களம்

உள்ளடக்கம்

ஒப்புகைகள் 2

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு பற்றி 3

வரைபடங்களின் அட்டவணை 5

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தினால் (1994 ஆண்டின் 11 ஆம் இலக்க) பொறுப்பளிக்கப்பட்டவாறான தொழிற்பாடுகள் 6

நிறுவனசார் கட்டமைப்பு 9

தலைவரின் மீளாய்வு 10

ஆணைக்குழு உறுப்பினர்கள் 13

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் அலுவலர்கள் – 2020 15

செயலாற்றுகை சிறப்புகூறுகள் - 2020 16

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் தொழிற்பாடு (1): விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திக்காக அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதல் 16

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு தொழிற்பாடு (2): இலங்கையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளை மீளாய்வுசெய்கின்ற அறிக்கையினை வருடாந்தம் அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தல் 19

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு (3): தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்ளின் முன்னேற்றத்தினை மீளாய்தல் 20

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுத் தொழிற்பாடு (4): விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் தொடர்பிலான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் மீது அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கு முன்னர் இந்நிறுவனங்களுடன் ஆலோசனைகளை நடாத்துதல் 27

சர்வதேச விவகாரங்கள் 32

அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்திற்கான நிலையம் 32

மனித வள முகாமைத்துவம் 34

அலுவலர் செய்திகள் 35

இயலளவு விருத்தி.்.உள்ளக மற்றும் வெளியிடப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 35

நலநோம்புகைச் செயற்பாடுகள் 36

வெளிநாட்டுப் பயிற்சி.்.செயலமர்வுகள்.்.கருத்தரங்குகள்.். ஆய்வரங்குகளில் பங்கேற்றல் 36

நிதியியல் கூற்றுகள் 37

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 40

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 39

வரைபடங்களின் அட்டவணை

வரைபடம் 1 : சட்டம், சட்டவாக்கம், தொலைநோக்கு மற்றும் பணி 6

வரைபடம் 2 : நிறுவனசார் கட்டமைப்பு 9

வரைபடம் 3 : தென் கொரியாவின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை நிறுவனக் கருத்திட்ட ஆர்வலர் சந்திப்பு 18

வரைபடம் 4 : விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமை அறிக்கை 2018 19

வரைபடம் 5 : பயிர் பாதுகாப்பு சேவைகள் - கமத்தொழில் திணைக்களம் மற்றும் பண்ராநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவன பற்றிய செயலாற்றுகை அறிக்கைகள் 21

வரைபடம் 6 : தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் செயலாற்றுகை மீளாய்வு 22

வரைபடம் 7 : தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயலாற்றுகை மீளாய்வு 23

வரைபடம் 8 : இலங்கை நானோ தொழில்நுட்ப நிறுவனத்தின் செயலாற்றுகை மீளாய்வு 24

வரைபடம் 9 : நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை பற்றிய செயலாற்றுகை மீளாய்வு 25

வரைபடம் 10 : கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் பற்றிய செயலாற்றுகை மீளாய்வு 25

வரைபடம் 11 : இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் பற்றிய செயலாற்றுகை மீளாய்வு 26

வரைபடம் 12 : இளம் விஞ்ஞானிகள் மன்ற வழிநடாத்தல் குழுக் கூட்டம் 29

வரைபடம் 13 : 9 ஆவது இளம் விஞ்ஞானிகள் மன்ற ஆராய்ச்சி ஆய்வரங்கு 30

வரைபடம் 14 : ஆராய்ச்சிக்கான புள்ளிவபரங்கள் மீதான இளம் விஞ்ஞானிகள் மன்ற செயலமர்வு 31

வரைபடம் 15 : நிதியியல் நிலைக் கூற்று 38

வரைபடம் 16 : நிதியியல் செயலாற்றுகைக் கூற்று 39

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தினால் (1994 ஆண்டின் 11 ஆம் இலக்க) பொறுப்பளிக்கப்பட்டவாறான தொழிற்பாடுகள்

Act & Legislation

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுடப் அபிவிருத்திச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டு 1998 ஒகஸ்ட் மாதம் தொழிற்படத் தொடங்கியது. இது, 1998 டிசம்பர் 6 அன்று முறையாக ஆரமபித்து வைக்கப்பட்டதுடன் 1999 சனவரியில் தொழிற்பாடு ஆரமபிக்கப்பட்டது.

எமது தொலைநோக்கு

"இலங்கை மக்களின் நல்வாழ்வையும் சுபீட்சத்தினையும் மேம்படுத்துவதற்கு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வாய்ப்பு மற்றும் பயன்பாடு பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குகின்ற உன்னதமான நிறுவனமாக திகழ்தல்."

Vision

Mission

எமது பணி

"நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கான பிரயோகத்திற்கென விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய இயலளவுகளைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்திற்கு கொள்கைகளை, உபாயங்களை, திட்டங்களை வழங்குதல்"

வரைபடம் 1 : சட்டம், சட்டவாக்கம், தொலைநோக்கு மற்றும் பணி

- பின்வருவன தொடர்பான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் உள்ளடங்கலாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்:

ü பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்கான விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் பிரயோகம்;

ü கைத்தொழில், விவசாயம், சேவைகள் மற்றும் பொருளாதாரம் எனபவற்றின் வினைத்திறன் மற்றும் போட்டித்தன்மையில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் தாக்கம்;

ü மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் தாக்கம்;

ü கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி என்பவற்றுக்கு பொறுப்பான அதிகாரிகளுடனான ஆலோசனையுடன் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கு தேவையான மனித மற்றும் ஏனைய வளங்களை மேம்படுத்துதல்;

ü இலங்கையின் இயற்கை வளங்களின் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம்

ü தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் விதத்தில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப விடயப்பரப்புகளை அடையாளப்படுத்தல் மற்றும் முன்னுரிமைளித்தல்;

ü விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தின் உருவாக்கம், தக்கவைப்பு மற்றும் ஈர்ப்புக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குதல்

ü விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கென உற்பத்தித்திறன்மிக்க பிரயோகத்திற்கு உகந்த முகாமைத்துவ உபாயங்களை நிறுவுதல்;

ü விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு நிதியுதவியின் முன்னுரிமை அடங்கலாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிதி ஒதுக்கீடு;

- முன்னுறுகின்ற ஆண்டில் இலங்கையில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளை மீளாய்வுசெய்து, அத்துடன் மனித வள அபிவிருத்திக்கான வழிமுறைகளின் செயல்திறன்வாய்ந்தன்மை, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயற்பாடுகள், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் மீதான பொதுச் செலவினங்களின் வினைத்திறன் மற்றும் பொதுத் துறை செயற்பாடுகளினால் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பயன்பாடு மீது வருடாந்தம் அரசாங்கத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தல்;
- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள் தொடர்பாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் முன்னேற்றத்தை மீளாய்வுசெய்தல்;


- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் திட்டங்கள் மீது அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கு முன்னர், சம்பந்தப்பட்ட விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் ஆலோசனை நடாத்துதல்.

- அமைச்சரின் முன் அனுமதியுடன் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான இலங்கை மாநாட்டை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூட்டி, சட்டத்தின் 2ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்கள் தொடர்பாக இலங்கையில் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் பற்றி கலந்துரையாடுவதற்கு மன்றமொன்றைத் ஏற்பாடுசெய்தல்; மற்றும் அத்தகைய கலந்துரையாடல்கள் பற்றிய அறிக்கையை அமைச்சரிடம் சமர்ப்பித்தல்.

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் முகக்குறிப்பு

- *தலைவர் ஆணைக்குழுவிற்கு தலைமை தாங்குகிறார்.*
- *பணிப்பாளர் பிரதம நிறைவேற்று அலுவலர் ஆவார்.*
- *சிரேஸ்ட விஞ்ஞானிகளும் விஞ்ஞானிகளும் துறைசார் கொள்கைகள், உபாயத் திட்டங்கள் மற்றும் ஏனைய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஆவணங்கள் போன்றவற்றை உருவாக்குதற்கும் தயாரிப்பதற்கும் பங்குதாரர்கள் மற்றும் ஆலோசனை மன்றங்களுடன் இணைந்து பணியாற்றுகின்றனர்.*
- *சட்டத்தினால் பொறுப்பாணையளிக்கப்பட்டவாறு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் நிறுவனசார் மீளாய்வினைப் மேற்கொள்வதற்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, தொடர்புடைய துறைகளில் இருந்து நிபுணர்களைத் திரட்டுகின்றது.*

நிறுவனசார் கட்டமைப்பு



வரைபடம் 2 : நிறுவனசார் கட்டமைப்பு

தலைவரின் மீளாய்வு



தலைவர் என்ற வகையில் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2020ம் ஆண்டுக்கான ஆண்டிறிக்கையினை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

2020 சனவரி 16 அன்று தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் தலைவராக கடமைகளை பொறுப்பேற்றதுடன் 2020 மார்ச் தொடக்கம் கொவிட் - 19 உலகளாவிய நோய்த்தொற்றின் முதலாம் அலையின் காரணமாக நாடு முடக்கப்பட்டது. முடக்கப்பட்ட காலப்பகுதியிலும் கூட நிறுவனத்தின் சீரான தொழிற்பாட்டினை உறுதிசெய்வதற்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு இணையவழி ஊடான கலந்துரையாடல்களை மேற்கொண்டது. 10 ஆணைக்குழுக் கூட்டங்கள் இடம்பெற்றதுடன் அவற்றில் ஐந்து கூட்டங்கள் ஷூம் தளம் ஊடாக இடம்பெற்றன.

பொதுவாக ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது அதன் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியுடன் வலுவாக இணைக்கப்பட்டுள்ளது. இதனாலேயே பல நாடுகளிலும் விவசாயம், சுகாதாரம் மற்றும் பொதுப் பிரஜைகளின் வாழ்க்கைத் தரம் என்பனவற்றில் முன்னேற்றமடைவதற்கு விஞ்ஞானக் கொள்கைக்கும் அவற்றின் நடைமுறைப்படுத்தலுக்கும் முன்னுரிமையளிக்கப்படுகின்றது. தொழில்நுட்ப அமைச்சுக்கு தற்போது பொருளாதார நிகழ்ச்சிநிரலில் உயர்வான முன்னுரிமை வழங்கப்பட்டு அதிமேதகு சனாதிபதியின் கீழ் உள்ளமை உண்மையிலேயே மகிழ்ச்சியளிக்கின்றது. கொவிட் 19 உடன் கூடிய தற்போதைய உலகலாவிய நோய்த்தொற்று மிகவும் குறிப்பாக விஞ்ஞானிகள், நுண்ணுயிரிலாளர்களாக வைரஸ்வியலாளர்களாக, தொற்றுநோயியலாளர்களாக அல்லது கணிதவியாளர்களாக திகழ்வதற்கு அவர்களுக்கான முக்கியத்துவத்தினை ஏற்படுத்தியுள்ளது.

1994 இல் 11ம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் மூலம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைவாக, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் பற்றி அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குவதற்கும், முன்னுறுகின்ற ஆண்டில் இலங்கையின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைளை மீளாய்வு செய்வதன் மூலம் அரசாங்கத்திற்கு அறிக்கையொன்றினை ஆண்டுதோறும் சமர்ப்பிப்பதற்கும், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் முன்னேற்றத்தினை மீளாய்வதற்கும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மீதான இலங்கையின் சமவாயத்தினை ஆண்டுக்கு இருமுறை கூட்டுவதற்கும் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு பொறுப்பானை வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி விடயத்திற்கு பொறுப்பான கௌரவ அமைச்சரினால் தேசிய

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு குறித்தொதுக்கப்படுகின்ற ஏனைய தொடர்புடைய நடவடிக்கைகளையும் குழு மேற்கொள்கின்றது.

2020 இல் ஆணைக்குழுவானது கொவிட் நிலைமைக்கு மத்தியிலும் பின்வரும் 7 விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயலாற்றுகை மீளாய்வினை தொடங்கியது: தேசிய விஞ்ஞான மற்றம், கைத்தொழில் பயிற்சி நிறுவனம், இலங்கையின் நனோ தொழில்நுட்ப நிறுவனம், தேசிய பொறியியல் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம், இலங்கை தேசிய நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை, பீடைநாசினி பதிவாளர் அலுவலகம் மற்றும் இரப்பர் ஆராய்ச்சி நிறுவனம். ஆணைக்குழு உறுப்பினர்களை உள்ளடக்குகின்ற விசேட குழு, இம்மீளாய்வுச் செயன்முறைக்கான நிபுணர் குழாத்தினரை தெரிவுசெய்தது. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது கொவிட் 19 உலகலாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியிலும் சுகாதார வழிகாட்டல்களை கடைப்பிடித்து ஏனைய ஆர்வலர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினர்களுடன் மெய்நிகர் வழிக் கலந்துரையாடல்களை மேற்கொண்டு நிபுணர்கள் குழாத்தின் மூலம் வழங்கப்பட்ட ஆதரவை பாராட்டுகின்றது.

கொரிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை நிறுவனத்துடனான பங்குடமையில் கூட்டிணைப்பு உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிக் கருத்திட்டத்தின் தொடர்ச்சியாக, தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு மூன்று மூலப்பிரமாணங்களைக் கொண்ட அதாவது, 1) தரமிக்க பாரியளவிலான உற்பத்திகள் - உற்பத்திறன் மேம்படுத்தலுக்கான நூதனமான தொழிநுட்பத்துடன் கூடிய விவசாயம், 2) வேளாண்மை உற்பத்திக்கான பெறுமதி சேர்த்தல் - உணவுத் தொழில்நுட்பம் - பதப்படுத்தலை மேம்படுத்தல், 3) கிராமிய துறையினால் சிறிய, நடுத்தர வேளாண்வியாபார தொழில்முயற்சி மற்றும் விவசாய உற்பத்தி அத்துடன் சந்தைப்படுத்தல் தொழில்முயற்சி அபிவிருத்திக்கான செயலி என்பவற்றுக்கான வழிகாட்டலைத் தயாரிப்பதற்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு தொடங்கியது.

தேசிய கொள்கைக் கட்டமைப்பின் அடிப்படையிலும் கொவிட் நோய்க்கு பிந்திய தாக்கத்தினை கையாளுவதற்கும் மூன்று கருப்பொருள் சார்ந்த முன்முயற்சிகளின் கீழ் முன்னுரிமை விடயமாக விவசாயத்துறை இனங்காணப்பட்டுள்ளது. இம்முறைமைசார்ந்த ஆய்வினை மேற்கொள்வதன் வாயிலாக, நவீன மற்றும் முன்னேற்றகரமான தொழிநுட்பங்களை பயன்படுத்தி நாட்டின் சம உணவுப் பங்கினையும், பாதுகாப்பினையும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான வேளாண்வியாபார மற்றும் தொழில்முயற்சியாண்மை, மற்றும் வேளாண்மை உற்பத்திக்கான பெறுமதி சேர்த்தல்கள் என்பனவற்றையும் கையாளுகின்றவிதத்தில் துறைக்கென நடைமுறைப்படுத்தத்தக்க நடவடிக்கை திட்டமொன்றினை உருவாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கருத்தொருமிப்பானது தேவையான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கையினை நடைமுறைப்படுத்தி நிறுவும் மட்டம் வரையிலும் தேவையான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கையினை இனங்காண்பதற்காக கீழ் மட்ட சமூதாயத்துடன் பணியாற்றுகின்ற முன்னேடிக் கருத்திட்டமொன்றினை உருவாக்குவதாகவிருந்தது.

அணிசேரா அத்துடன் ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்திற்கான மையமாக இலங்கையின் தேசிய நோக்கு விளங்குவதனால், தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலையத்தின் ஊடாக இலங்கை விஞ்ஞானிகளுக்கும் விஞ்ஞான நிர்வாகிகளுக்கும் பல்வேறு பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதற்கு இணைந்துள்ளது.

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது 2020 நவம்பர் 13 அன்று மிகவும் வெற்றிகரமான அதன் 9 ஆவது இளம் விஞ்ஞானி மன்றத்தின் ஆய்வரங்கினை நடாத்தியது. திறன் அபிவிருத்தி, வாழ்க்கைத்தொழில் கல்வி, மற்றும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க

அமைச்சின் செயலாளர் திருமதி பத்மா ராஜபக்ஷ, இளம் விஞ்ஞானிகளுக்கு உரையாற்றினார். ஆணைக்குழுவின் உறுப்பினரான கலாநிதி ரவி லியனகே, தொழில்முயற்சியாளர்களான இளம் விஞ்ஞானிகளின் வகிபாகம் பற்றி முக்கிய உரையினை ஆற்றினார். பேராசிரியர் மெதிக விதானகே அவரது ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் பற்றி உரை நிகழ்த்தினார். அனைத்தும் ஷும் தளத்தில் இடம்பெற்ற 51 ஆராய்ச்சிக் கட்டுரைகள் 4 சமகால அமர்வுகளில் எடுத்துரைக்கப்பட்டன. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் மாநாடு ஷும் தளத்தில் இடம்பெற்றது இதுவே முதற்தடவையாகும். இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் தலைவர் கலாநிதி கே. டப்லிவ். எல். கே. வீரசிங்க மற்றும் இணைச் செயலாளர்களான கலாநிதி எம். கே மீகஹகும்பர மற்றும் கலாநிதி யு. எஸ். லியனராய்ச்சி மற்றும் ஆணைக்குழுவின் விஞ்ஞானி செல்வி திலினி முனகமகே ஆகியோர் பதில் பணிப்பாளரின் வழிகாட்டலின் கீழ் வழங்கிய கடின உழைப்பு அதன் வெற்றிக்குப் பங்களித்தது.

2017 முதல் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் முன்னேற்றத்தை தடுக்கின்ற உள்ளகப் பிரச்சினையொன்று காணப்பட்டது. முக்கிய தடைகளை நீக்கி, அரசாங்க நிதியங்கள் நட்டமடைவதற்கு வழிவகுத்து முழுக் கொடுப்பனவுடன் பணிப்பாளர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்படடிருந்த பணிப்பாளர் தொடர்பில் இறுதி விசாரணையினை தொடங்குவது சாத்தியமாக இருந்தது. தற்போது இறுதி விசாரணை நடாத்தப்பட்டு வருகின்றது.

திறன் அபிவிருத்தி, தொழிற்பயிற்சிக் கல்வி, மற்றும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் இராஜாங்க அமைச்சர், கௌரவ திலங்க சுமதிபால, தற்போதைய இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, செயலாளர்களான திரு. அனுர திஸாநாயக்க மற்றும் திருமதி. பத்மா ராஜபக்ஷ, அத்துடன் அமைச்சின் ஏனைய அலுவலர்கள் போன்றோரினால் வழங்கப்பட்ட செயல்திறன்வாய்ந்த ஒத்துழைப்பை மிகவும் பாராட்டுகின்றேன்.

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவை முன்னோக்கி எடுத்துச்செல்வதற்கு ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் வழிகாட்டலுக்காக அவர்களுக்கு நன்றி கூறுகின்றேன். பதில் பணிப்பாளர் திருமதி நசீமா அகமட் அவர்களுக்கும் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் குழுப் பணியாளர்களுக்கும் அவர்களது வெற்றிகரமான உதவிக்கும் அவர்களது செயல்திறன்வாய்ந்த குழுப் பணிக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகும்.

பேராசிரியை ஷனிகா ஹிரிம்புரேகம
தலைவி,
தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு,
2020 சனவரி 16 தொடக்கம் 2020 டிசம்பர் 31 வரை

ஆணைக்குழு உறுப்பினர்கள்



பேராசிரியை நிரஞ்சனி, ரத்நாயக்க ஆணைக்குழு உறுப்பினர்

பொறியியலாளர், பேராசிரியை (திருமதி) நிரஞ்சனி ரத்நாயக்க மொரட்டுவைப் பல்கலைக் கழகத்தின் சிவில் பொறியலில் விடுவிப்பு பேராசிரியை ஆவார்.



பேராசிரியை சிறிமலி பர்னாந்து, ஆணைக்குழு உறுப்பினர்.

பேராசிரியை சிறிமாலி பர்னாந்து, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் மருத்துவ பீடத்தின் சிரேஸ்ட பேராசிரியையாவார்.



கலாநிதி ரவி லியனகே, ஆணைக்குழு உறுப்பினர்

கலாநிதி லியனகே இலங்கையில் உள்ள முன்னனி உணவு, தனிப்பட்ட கவனிப்பு மற்றும் தளபாடம் தயாரித்தல் விநியோகித்தல் நிறுவனமான ரைகம் சாம்ராஜியத்தின் நிறுவுனரும் தலைவரும், பிரத நிறைவேற்று அலுவலரும் ஆவார்.



பேராசிரியர் சுகத் ரொகான் முனசிங்க, ஆணைக்குழு உறுப்பினர்.

பேராசிரியர் சுகத் ரொகான் முனசிங்க, மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புப் பொறியியல் பிரிவிற்கு இணைக்கப்பட்டுள்ள பட்டயம் பெற்ற பொறியியலாளர் ஒருவராவார்



பேராசிரியை ரேனுகா நில்மினி, ஆணைக்குழு உறுப்பினர்
பேராசிரியை ஏ.எச்.எல்.ஆர். நில்மினி ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதியாவார்

.



திரு. ருவான் கெகுலு வித்தான, ஆணைக்குழு உறுப்பினர்
திரு ருவான் கெகுலு வித்தான ஆர்எச் பில்டிங் சிஸ்ட்டம் பிறைவெட் லிமிடட் இன் தலைவராக / முகாமைத்துவப் பணிப்பாளராக பணியாற்றுகின்றார்.

திறைசேரியின் பிரதிநிதி



திருமதி தர்சினி பிரசாந், ஆணைக்குழு உறுப்பினர்
திருமதி தர்சினி பிரசாந், தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவில் திறைசேரியின் பிரதிநிதியாக பணியாற்றுகின்றார்.

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் அலுவலர்கள் – 2020

பேராசிரியை ஷினிகா ஹிரிம்புரேகம	**தலைவி**
திருமதி நஸீமா அஹமட்	பதில் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அலுவலர் (2020.06.01 தொடக்கம்)
கலாநிதி தமாரா எப் டயஸ்	பதில் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அலுவலர் (2020.01.27 – 2020.05.31)
திருமதி நந்தனி சமரவிக்ரம	பதில் பணிப்பாளர்/ பிரதம நிறைவேற்று அலுவலர் 2020.01.26 வரை)
கலாநிதி கல்ப டப்லிவ் சமரகோன்	சிரேஸ்ட விஞ்ஞானி
திரு செயிட் ஷிஹ்மி	சிரேஸ்ட விஞ்ஞானி
திருமதி ஜி சீ குமாரி பீரிஸ்	பிரதிப் பணிப்பாளர்- நிதி மற்றும் நிர்வாகம்
திருமதி ரசிதா பெரேரா	விஞ்ஞானி
செல்வி எம் டி திலினி	விஞ்ஞானி
செல்வி யூ கே டீ எல் எச் கே உடுகம	நிர்வாக அலுவலர்
திரு எஸ் ஏ டி எஸ் பீ சேனநாயக	தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப/ தரவுத்தள இணை அலுவலர்
திரு ஆர் எம் ரி ரத்நாயக	நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - நிதி
திருமதி ஜி எம் சீ என் மாஹரகே	முகாமைத்துவ உதவியாளர்
திருமதி டப்லிவ் எம் ஐ கே வெதமுல்ல	முகாமைத்துவ உதவியாளர்
திரு அனில் ஹெட்டியாராச்சி	சாரதி
திரு ஜயசுந்தர பிரமாத	சாரதி
திரு பிரதீப் எரந்த	சாரதி
திரு ஏ டி தணபால	அலுவலக உதவியாளர்
திரு கனிஸ்க ஜிம்ஹான்	அலுவலக உதவியாளர் (2020.0316 வரை)

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் தொழிற்பாடு (1): விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திக்காக அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குதல்

01. கனிம வளங்கள் மீதான தேசிய கொள்கை

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது உயர் கல்வி, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க அமைச்சு அத்துடன் மகாவலி அபிவிருத்தி சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சு என்பவற்றின் கூட்டிணைப்புடன் கனிம வளங்கள் மீதான தேசிய கொள்கையினை தயாரித்தலை தொடங்கியது. கோட்பாட்டு மட்டத்தில் கொள்கை அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டது. எவ்வாறாயினும், கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு பொருத்தமான உபாயங்கள் மற்றும் நடவடிக்கைத் திட்டத்துடன் கொள்கையினை மீளச்சமர்பிக்குமாறு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சு கோரிக்கை விடுத்தது. இத் தீர்மானத்தின் மூலம் கனிம வளங்களின் கொள்கை தயாரித்தலானது மகாவலி அபிவிருத்தி அமைச்சு மற்றும் புவிச்சரிதவியல் அளவீடு மற்றும் சுரங்கப் பணியகம் என்பவற்றின் மேற்பார்வையின் கீழ் வருகின்றது என்பதை எடுத்துக்காட்டி கொள்கையினை இறுதிப்படுத்தும் பொறுப்பினை அவை பொறுப்பேற்றன. நிரல் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, கொள்கையினை இறுதிப்படுத்துவதில் பல்வேறு கலந்துரையாடல்களை மேற்கொண்டது. இக் கொள்கையானது கனிமத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் அவற்றின் பெறுமதிசேர்த்தல் நோக்கெல்லையினை விரிவுபடுத்துவதற்கு இயலச்செய்கின்ற சூழலொன்றினை வழங்கி அதன் ஊடாக முதலீடுகள் மீதான வருவாய்களை அதிகரிக்கின்ற அதேவேளை எமது கனிம மூல வளங்களை பயன்படுத்தி பெறுமதிசேர்க்கப்பட்ட உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் நாட்டிற்கு அதிக வெளிநாட்டு செலாவணியினை கொண்டுவரும். கொள்கையின் முக்கியத்துவத்தினை பரிசீலனையில் கொண்டு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு கொள்கையினை இறுதிப்படுத்துவதனை துரிதப்படுத்துவதற்கு தொடர்புடைய அமைச்சுக்களுடன் இணைந்து தொடர்ந்தும் பணியாற்றியது.

02. உள்நாட்டு விதைக் கொள்கை

2020 இல் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் பெறுப்பேற்கப்பட்ட விதை சான்றுப்படுத்தல் சேவைகள் நிலையத்தின் நிறுவனசார் மீளாய்வின் அடிப்படையில் தேசிய விதைக் கொள்கை ஒன்றுக்கான தேவை பரிந்துரைக்கப்பட்டுள்ளது. உண்மையில், உள்நாட்டு விதைக்கொள்கையொன்றின் முக்கியத்துவம் சௌபாக்கிய தெக்மபிலும் (தேசிய கொள்கைக் கட்டமைப்பு) எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய, தொடர்புடைய ஆர்வலகளுடனான கூட்டிணைப்புடன் தேசிய விதைக் கொள்கையொன்றினை உருவாக்குகின்ற செயன்முறையினை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு தொடங்கியது. ஆயினும், இப் பணி கமத்தொழில் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் குழுவொன்றினால் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது என்பது தெரியவந்தது. இதனால் இப்பணியில் இரட்டைச் செயன்முறையினை தவிர்ப்பதற்கு தொடர்புடைய அதிகாரிகளுடன் ஆலோசித்ததன் பின்னர், தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது விவசாயத்துடன் தொடர்புடைய இக்கொள்கையினை வசதிப்படுத்துவதில் நேரடியாக ஈடுபடாது என தீர்மானிக்கப்பட்டது. எனினும், தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் உள்ளீடுகள் தேவைப்படுகின்ற போதெல்லாம் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு தொடர்ந்தும் அதனை வழங்கும்.

03. தேசிய சுகாதார கொள்கையினுள் சுதேச நோக்குகளை கூட்டிணைத்தல்

2020 இல் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் பொறுப்பேற்கப்பட்ட பண்டார நாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவகத்தின் நிறுவனசார் மீளாய்வின் அடிப்படையில், தேசிய சுகாதார கொள்கையினுள் சுதேச மருத்துவத்தை/ஆயுர்வேத கொள்கை நோக்குகளை கூட்டிணைப்பதற்கான தேவையொன்று காணப்படுகின்றது என மீளாய்வாளர்கள் குழாத்தினால் பரிந்துரையொன்று வழங்கப்பட்டது. இது, சௌபாக்கிய தெக்ம என்ற தேசிய கொள்கைக் கட்டமைப்பில் குறிப்பிட்டவாறு சுதேச மருத்துவத்தை/ஆயுர்வேத மருந்துப்பொருட்களை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை வழங்கும். அதற்கமைய, தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது மீளாய்வில் கண்டறியப்பட்டவற்றை அவசியமான பின்தொடர் நடவடிக்கைக்காக சுகாதார அமைச்சின் உரிய அதிகாரிகளுக்கு ஏறகனவே அறிவித்துள்ளது. தொடர்புடைய நிரல் அமைச்சினால் சுகாதாரம் தொடர்புபட்ட கொள்கைகள் வகுக்கப்படுகின்ற போது ஆர்வலர் ஆலோசனையை வசதிப்படுத்துவதற்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு திட்டமிடுகின்றது.

04. புத்தாக்கக் கொள்கை மீதான தென்கொரிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை நிறுவனத்துடன் கூட்டுமுயற்சிக் கருத்திட்டம்

தென் கொரியாவின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை நிறுவனத்திற்கும் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கும் இடையிலான கொள்கை ஆலோசனை கருத்திட்டத்தின் கீழ் 2020 இல் விவசாயத் துறையின் உற்பத்தித்திறன், பதப்படுத்தல் மற்றும் விவசாயத் தொழில்முயற்சி என்பவற்றை மேம்படுத்துவதற்கு விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க கொள்கைச் சாதனங்களை அறிமுகப்படுத்துவதனை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு தொடங்கியது. விவசாயத்துறை மீதான கொவிட் 19 இன் எதிர்மறையான தாக்கத்தின் பின்னணியுனுடன் விவசாயத்துறையானது இக் கருத்திட்டத்தின் கீழ் முன்னுரிமை விடையப்பரப்பாக கருத்திற்கொள்ளப்பட்டது. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கும் தென்கொரிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை நிறுவனத்தின் இணைத்தரப்பினர்களுக்கும் இடையிலான பல்வேறு இணையவழிக் கலந்துரையாடல்களின் பின்னர், விடயம் பற்றி எண்ணக்கரு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டது. அதற்கமைய, இலங்கையில் விவசாயத்தில் உற்பத்தித்திறன், பதப்படுத்தல் மற்றும் தொழில்முயற்சி மேம்படுத்தலுக்காக (முன்னுரிமைப்படுத்தப்பட்ட 06 ஏற்றுமதிப் பயிர்களுக்காக) விஞ்ஞான, தொழிநுட்ப, புத்தாக்கம் தூண்டப்பட்ட நடவடிக்கை திட்டத்தினை உருவாக்குவதற்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு அலுவலர்களுடன் சேர்த்து மூன்று உள்நாட்டு கருத்திட்ட ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டனர். பல இணையவழிக் கூட்டங்களின் போதும் ஒரு இணையவழி செயலமர்வின் போதும் கொரிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை நிறுவன ஆலோசகர்களிடம் இருந்தான மேலதிக மீளாய்வுடன் நடவடிக்கை திட்டத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது வரைவுகள் தயாரிக்கப்பட்டன. கமத்தொழில் அமைச்சு, கமத்தொழில் திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் இளைஞர் விவகார அமைச்சு என்பன உள்ளடங்கலாக தொடர்புடைய உள்நாட்டு ஆர்வலர்களுடன் நடவடிக்கைத்திட்டம் பற்றியும் எதிர்கால நடைமுறைப்படுத்தல் செயற்பாடுகள் பற்றியும் மேலும் கலந்துரையாடப்பட்டன. கொரிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்திடமிருந்தும், உள்நாட்டு நிபுணர்களிடமிருந்து உள்ளீடுகளைப் பெற்று இறுதிப்படுத்தப்பட்ட நடவடிக்கைத்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலை பரிசீலிப்பதற்காக கமத்தொழில் திணைக்களத்திற்கு அனுப்பப்படும்.





வரைபடம் 3 : தென் கொரியாவின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை நிறுவனக் கருத்திட்ட ஆர்வலர் சந்திப்பு

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு தொழிற்பாடு (2): இலங்கையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகளை மீளாய்வுசெய்கின்ற அறிக்கையினை வருடாந்தம் அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தல்

முந்தைய ஆண்டில் இலங்கையில் தொழில்நுட்ப நடவடிக்கைகளை மீளாய்வுசெய்கின்ற அறிக்கையினை ஆண்டுதோறும் அரசாங்கத்திற்கு சமர்பிப்பதற்கான பொறுப்பாணை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கை மனித வளங்கள் அபிவிருத்திக்கான வழிமுறைகளின் செயல்திறன்வாய்ந்த தன்மை பற்றிய மதிப்பீடு, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயலாற்றுகை, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் மீது அரசாங்க செலவிடுதலின் செயல்திறன் மற்றும் அரசாங்கத் துறை அத்துடன் தனியார்துறை பொறுப்பேற்புகள் மூலம் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்தை பயன்படுத்தல் என்பவற்றை உள்ளக்குகின்றது.

01. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் அறிக்கை ï 2018

இக்குறிக்கோள்களை நிறைவுசெய்வதற்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, 2018 ஆம் ஆண்டின் போது 40 அரசதுறை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் நிலமைகளை மீளாய்வுசெய்துள்ளது. இது தொடர்பில் 5 பரந்த விடையங்களில் அதாவது, i) மனித வளங்கள், ii) பௌதீக வளங்கள், iii) ஆராய்ச்சி உள்ளீடுகள், iv) ஆராய்ச்சி வெளியீடுகள் மற்றும் v) கேள்விக்கொத்து கணக்கெடுப்பு வடிவில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைகள் பற்றிய தரவுகள் சேகரிக்கப்பட்டன. உரிய நிறுவனங்ளில் இருந்து கிடைக்கப்பெற்ற தரவுகளில் இருந்து தரவுப் பகுப்பாய்வினை நிறைவுசெய்ய தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு இயலுமாக இருந்ததுடன் அறிக்கையினை இறுதிப்படுத்தல் முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டினுள் இவ் அறிக்கை வெளியிடப்படும்.



வரைபடம் 4 : விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமை அறிக்கை 2018

02. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமைகள் அறிக்கை 2019 ï 2020

2019-2020 ஆண்டுக்கான தரவு சேகரிப்புச் செயன்முறை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளருடன் இடம்பெற்ற மீளாய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் விளைவாக தாமதமடைந்தது. இது தரவு சேகரிப்பு படிவத்திற்கான மாற்றங்கள், தரவு சேகரித்தல் முறையியலுக்கான மாற்றங்கள், தரவு சேகரித்தலை அதனை ஒத்த வேறு நிறுவனங்களுடன் ஒன்றிணைத்தல் மற்றும் அறிக்கை வடிவம் போன்றனவற்றை உள்ளக்கியிருந்தது.

எனவே, 2019/2020 அறிக்கையானது எதிர்கால வாய்ப்பொன்றுடன் நாட்டின் உண்மையா விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைமைகளை பிரதிபலிக்கும் முழுமையான அணுகுமுறையொன்றின் ஊடாக ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் அமைச்சின் கரிசனைகளை நிறைவுசெய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய முறையியலுடன் 2021 ஆம் ஆண்டின் போது வெளியிடப்படும். இதற்கு இசைந்துசெல்லும் விதத்தில் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது விசேடமாக, தேவையான தரவுகளையும், தகவல்களையும் பெற்றுக்கொள்வது தொடர்பில் அனைத்தையும் உள்ளடக்கிய துறைசார் அறிக்கையொன்றினை தயாரிப்பதில் உள்ள பிரச்சினைகளை இனங்காணும் நடவடிக்கையினை முன்னெடுக்கின்றது.

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு (3): தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்ளின் முன்னேற்றத்தினை மீளாய்தல்

சட்டத்தின் 2 ஆம் பிரிவில் எடுத்துரைக்கப்பட்ட குறிக்கோள்கள் தொடர்பில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களை மீளாயும் பொறுப்பாணை ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகள் தேசிய முன்னுரிமைகளையும் இலக்குகளையும் நிறைவேற்றுகின்றன என்பதனை உறுதி செய்வதற்கு அவற்றின் தரம், செலவுச் சிக்கனம், தொடர்புத்தன்மை மற்றும் தாக்கம் என்பனவற்றை மதிப்பிடுவதற்கு தொடர்புடைய துறைகளிலுள்ள நிபுணர்களை உள்ளடக்குகின்ற ஆணைக்குழுவின் அனுமதியுடன் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு மூலம் நியமிக்கப்பட்ட வெளிவாரி குழாம் ஒன்றினால் மீளாய்வுகள் கொண்டுநடாத்தப்படுகின்றன. கையேட்டின் அடிப்படையில் மீளாய்வு மேற்கொள்ளப்படுவதுடன் தேவையான தகவல்கள் நிறுவனங்களிடமிருந்து ஆர்வலர் ஆலோசனை ஊடாகவும் சேகரிக்கப்படுகின்றன.

மீளாய்வுச் செயன்முறை நான்கு முக்கிய கட்டங்களை கொண்டுள்ளது.


- மீளாய்வுக்கான தயார்படுத்தல்
- நிறுவனத்திற்கு மீளாய்வுக் குழுவின் வருகைகள்
- மீளாய்வுக் குழுவினால் வரைவு அறிக்கையினை தயாரித்தல்
- மீளாய்வு குழுவினால் இறுதி மீளாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல்.

இம்முழுமையான செயன்முறையும் கள அவதானிப்புகளை மற்றும் கலந்துரையாடல்களை அடிப்படையாகக் கொண்டமையினால் தற்போதைய கொவிட் 19 உலகலாவிய நோய்த்தொற்று நிலமை 2020 இல் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயலாற்றுகை

மீளாய்வுகளை வெகுவாக பாதித்தது. எனினும், ஆணைக்குழு, 2020 ஆம் ஆண்டின் போது 7 மீளாய்வுகளை தொடங்கக்கூடியதாக இருந்தது.
தொடர்புடைய மீளாய்வுக் குழாம்களிடமிருந்து 2020 இல் பின்வரும் மீளாய்வு அறிக்கைகளை ஆணைக்குழு பெற்றுக்கொண்டதுடன் ஆணைக்குழுவின் அனுமதிக்காக சமர்பிக்கப்பட்டது. இச் செயன்முறைக்கு அமைவாக, ஆணைக்குழுவிற்கு பரிந்துரைகளை மேற்கொள்வதற்கு தொடர்புடைய அறிக்கைகளை ஆய்வுசெய்வதற்கு ஆணைக்குழுவின் உறுப்பினர்களை உள்ளடக்குகின்ற இரு துணைக் குழுக்களை ஆணைக்குழு நியமித்தது.

1. பயிர் பாதுகாப்பு சேவைகள் - கமத்தொழில் திணைக்களம்

2. பண்டாராநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனம்





வரைபடம் 5 : பயிர் பாதுகாப்பு சேவைகள் - கமத்தொழில் திணைக்களம் மற்றும் பண்ராநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவன பற்றிய செயலாற்றுகை அறிக்கைகள்

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது நிறுவனசார் பரிந்துரைகளை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சுக்கும் தொடர்புடைய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும் அனுப்பியது. எனினும், அநேகமான சந்தர்ப்பங்களில் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தீவிரமாக பரிசீலிக்கப்படவில்லை. நிறுவனசார் மீளாய்வுப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதனை உறுதிசெய்யும் பொருட்டு நடைமுறைப்படுத்தல் வழிமுறைகளுக்கான செயல்திறன்மிக்க செயலாற்றுகை கண்காணிப்பு முறைமையொன்று தாபிக்கப்படும் விதத்தில் ஆணைக்குழு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களத்துடன் கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தது. கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் செயலாற்றுகை கணக்காய்வுச் செயன்முறையினுள் இதனை உள்ளடக்குவதற்கு சாதகமாக இணங்கியதுடன் தொடர்புடைய நிறுவனத்திற்கு மேலதிகமாக திறைசேரிக்கும், நிரல் அமைச்சுக்கும் மீளாய்வு அறிக்கைகளின் பிரதிகளை அனுப்புமாறு ஆணைக்குழுவை கோரியது.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயலாற்றுகை மீளாய்வு விபரங்கள் பின்வருமாறு:

1. தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (NERDC)

தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையமானது 1957 இன் 40 இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக 1974 இல் தாபிக்கப்பட்டதுடன் தற்போது திறன் அபிவிருத்தி, வாழ்க்கைத்தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் மேற்பார்வையின் கீழ் தொழிற்படுகின்றது. உள்நாட்டுப் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி தொழில்துறையின் அபிவிருத்தியினை ஊக்குவித்து வசதிப்படுததும் முதன்மைக் குறிக்கோளுடன் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட் முதன்மை நிறுவனங்களில் ஒன்றாகும்.

தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் பற்றிய மீளாய்வினை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, 2020 செப்படம்பரில் தொடங்கியதுடன் மீளாய்வதற்கென பின்வரும் உறுப்பினர் குழாம் நியமிக்கப்பட்டது.

1. பேராசிரியர் ஆனந்த ஜயவிக்கரம (தலைவர்)
2. திரு. சிரோமல் பர்நாந்து
3. பேராசிரியர் புத்திக பீ ஜயசேகர

ஏகலவில் உள்ள தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்கு 2020 ஓகஸ்ட் 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் குழாம் மீளாய்வு விஜயங்களை மேற்கொண்டு சிரேஸ்ட அலுவலர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தியது. உரிமம்பெற்றவர்கள், சேவைநாடிகள் மற்றும் வேறுபட்ட தொழில்நுட்ப வகைகளை வழங்குபவர்களைக்கொண்ட 37 ஆர்வலர்களின் பங்கேற்புடன் ஷூம் செயலியினைப் பயன்படுத்தி இணையவழிச் செயலமர்வாக 2020 டிசம்பர் 11 அன்று ஆர்வலர் சந்திப்பொன்று இடம்பெற்றது.



வரைபடம் 6 : தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் செயலாற்றுகை மீளாய்வு

2. தேசிய விஞ்ஞான மன்றம்

1994 இன் 11 ஆம் இலக்க பாராளுமற்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய விஞ்ஞான மன்றமானது இலங்கையில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப துறைக்கு பணியாற்றுவதற்கும் வலுவூட்டுவதற்கும் பொறுப்பாணையளிக்கப்பட்ட முக்கிய பணி நிறுவனமொன்றாகும். பல மானிய நிகழ்ச்சித்திட்டங்களூடாக ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புத்தாக்கம் அதேபோன்று விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப இயலளவு என்பவற்றை ஊக்குவித்து ஆதரவளிக்கின்றது. நாட்டில் விஞ்ஞானத்தைப் பிரபல்யப்படுத்தி விஞ்ஞானக் கல்வியை ஊக்குவிகின்ற அதேவேளை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் தகவல்களைப் பரப்புவதில் முன்னின்று பங்காற்றுவதற்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களையும் நடவடிக்கைகளையும் கொண்டுநடாத்துகின்றது.

முதலாவது மீளாய்வுக் குழக் கூட்டம் நடாத்தப்பட்டதன் பின்னர் தேசிய விஞ்ஞான மன்றத்தின் மீளாய்வினை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு 2020 ஓகஸ்ட் 20 அன்று தொடங்கியது. பின்வரும் உறுப்பினர் குழாம் நியமிக்கப்பட்டனர்

1. பேராசிரியர் (கலாநிதி) மன்சுள பீ எஸ் மாகமகே (தலைவர்)
2. பேராசிரியர் தியோடர் அலெக்ஸ்சான்டர் பர்நாந்து
3. திரு சாந்த வீரசிங்க

செப்டம்பர் 10 அன்று குழு தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு மீளாய்வு விஜயத்தினை மேற்கொண்டு நிறுவனத்தின் தலைவர், பதில் பணிப்பாளர் நாயகம் மற்றும் சிரேஸ்ட அலுவலர்கள் போன்றோருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தது. மீளாய்வுக் குழாத்தினால் இனங்காணப்பட்ட தொடர்புயை தரப்பினர்களுடன் ஆர்வலர் ஆலோசனை சந்திப்புகளும் மெய்நிகராக இடம்பெற்றது. மீளாய்வுச் செயன்முறையினை 2021 முதலாம் காலாண்டில் பூர்த்திசெய்வதற்கு குழு எதிர்பார்கின்றது.



வரைபடம் 7 : தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயலாற்றுகை மீளாய்வு

3. இலங்கை நானோ தொழில்நுட்ப நிறுவனம் (SLINTEC)

நனோ தொழில்நுட்பம் மற்றும் முன்னேற்றகரமான தொழிலநுட்பங்களில் விசேடத்துவம் பெற்ற உலகத்தரமிக்க ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையமொன்றினை உருவாக்குவதற்கும் இலங்கையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்காக நனோ தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானப் பூங்காவில் தமது ஆராய்ச்சி வசதிகளை கண்டுபிடிப்பதற்கு உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆகிய இருவகையான சேவைநாடிகளையும் கவருவதற்கு இலங்கை நானோ தொழில்நுட்ப நிறுவனத்திற்கு பொறுப்பாணையளிக்கப்பட்டுள்ளது.

இலங்கை நானோ தொழில்நுட்ப நிறுவனம் பற்றிய மீளாய்வு, பின்வரும் நிபுணத்துவ குழுவினால் 2020 ஓகஸ்ட் 12 அன்று தொடங்கப்பட்டது;

1. பேராசிரியர் ஆர் எம் ஜி ராஜபக்ஷ (தலைவர்)
2. பேராசிரியர் பி ஜி ஆர் தர்மரத்தன
3. கலாநிதி அதுல சேனாரத்ன

ஓகஸ்ட் 26 அன்று குழு, மீளாய்வு விஜயத்தை மேற்கொண்டு சிரேஸ்ட அலுவலர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தியதுடன் கிடைக்கப்பெறுகின்ற பரிசோதனை வசதிகளையும் அவதானித்தது. 2021 முதலாம் காலாண்டில் மீளாய்வுச் செயன்முறை பூர்த்திசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



வரைபடம் 8 : இலங்கை நானோ தொழில்நுட்ப நிறுவனத்தின் செயலாற்றுகை மீளாய்வு

4. தேசிய நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA)

கடற்றொழில் மற்றும் நிரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் வருகின்ற நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது பாராளுமன்றச் சட்டத்தினால் (1998 இன் 53 ஆம் இலக்க) 1999 இல் தாபிக்கப்பட்டது. இலங்கையில் நீர்வாழ் உயிரின மற்றும் உள்நாட்டு மீன்பிடிக் துறை அபிவிருத்திக்கான முக்கிய அரச அனுசரணைபெற்ற நிறுவனமாக இது விளங்குகின்றது.

நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மீளாய்வினை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, 2020 செப்படம்பரில் தொடங்கியதுடன் மீளாய்வதற்கென பின்வரும் உறுப்பினர் குழாம் நியமிக்கப்பட்டது.

1. பேராசிரியர் ஜே எம் பீ கே ஜயசிங்க (தலைவர்)
2. பேராசிரியர் உபாலி எஸ் அமரசிங்க
3. பேராசிரியர் கே எச் எம் அசோக தீபானந்த

2020 செப்படம்பர் 25 அன்று குழாம் மீளாய்வு வியஜயத்தை மேற்கொண்டு மேலதிக கலந்துரையாடலுக்காக முகாமைத்துவத்தை சந்தித்தது.





வரைபடம் 9 : நீர்வாழ் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை பற்றிய செயலாற்றுகை மீளாய்வு

5. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் (ITI)

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனமானது கேள்வியினால் தூண்டப்பட்ட அபிவிருத்தி மற்றும் சர்வதேச ரீதியாக போட்டிமிக்க தொழில்நுட்ப சேவைகளை நடாத்துகின்ற அரசாங்கத்திற்கு சொந்தமான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமொன்றாகும். கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனமானது 1995 தாபிக்கப்பட்ட இலங்கை விஞ்ஞான மற்றும் கைத்தொழில் ஆராய்ச்சியினைப் பின்தொடர்ந்துவந்த நிறுவனமாகும்.

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திற்கான மீளாய்வுக் குழு பின்வருவோரை உள்ளடக்கியிருந்தது.

1. கலாநிதி சந்ரா எம்புல்தெனிய (தலைவர்)
2. பேராசிரியர் பிரியானி அசோக பரனகம
3. திருமதி டி ஏ சிரியானி சகுந்தலா தென்னக்கோன்

2020 ஒக்டோபர் 9 அன்று குழு நிறுவனத்திற்கு விஜயம்செய்து தொடர்புடைய அலுவலர்களுடன் பல மெய்நிகர் கூட்டங்களை நடாத்தியது. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் பற்றிய மீளாய்வு 2021 இன் முதற் காலாண்டில் பூர்த்திசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கொவிட் 19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காரணமாக 2020 இன் ஆரம்பப் பகுதியில் தொடங்கப்பட்ட மீளாய்வுகள், 2021 இன் முதலாம் காலாண்டில் பூர்த்திசெய்யப்படுவதற்கு எதிர்பார்கப்படுகின்றது.



வரைபடம் 10 : கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் பற்றிய செயலாற்றுகை மீளாய்வு

6. இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் (RRI)

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகமானது உலகில் இறப்பர் பற்றிய மிகப் பழைய ஆராய்ச்சி நிறுவனமாவதுடன் இறப்பர் பயிர்ச்செய்கை அத்துடன் இறப்பர் கைத்தொழிலுக்கான நன்மைகளுக்காக பதப்படுத்தல் பற்றிய அனைத்து நோக்குகளிலும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நியதிச்சட்டப் பொறுப்புடன் கூடிய இலங்கையிலுள்ள அத்தன்மையிலான நிறுவனமாகவும் காணப்படுகின்றது.

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் பற்றிய மீளாய்வுக் குழு பின்வருவோரை உள்ளடக்கியிருந்தது.

1. கலாநிதி திருமதி ஐ ஜே த சொய்ஸா (தலைவி)
2. கலாநிதி குமுதினி குணசேகர
3.திரு ஏ ஏ எம் வி அதிகாரி

கொவிட் 19 உலகளாவிய நோய்த்தொற்று நிலைமை காரணமாக சில பிரதேசங்கள் முடக்கப்பட்டிருந்ததுடன் திட்டமிடப்பட்ட காலப்பகுதிக்கமைவாக குழு மீளாய்வினை முன்னெடுப்பதற்கு இயலாதிருந்தது. எனவே, இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் பற்றிய மீளாய்வு 2021 இரண்டாம் காலாண்டில் பூர்த்திசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.



வரைபடம் 11 : இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம் பற்றிய செயலாற்றுகை மீளாய்வு

7. பீடைநாசினிப் பதிவாளர் அலுவலகம் (ROP)

பீடைநாசினிப் பதிவாளர் அலுவலகம் பற்றிய மீளாய்வினைத் தொடங்குவதற்கு தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு திட்டமிட்டிருந்த போதிலும், கொவிட் 19 உலகளாவிய நோய்த்தொற்று காரணமாக திட்டமிடப்பட்டவாறு தொடங்குவதற்கு இயலாதிருந்ததுடன் 2021 இல் தொடங்கப்படும்.

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுத் தொழிற்பாடு (4): விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் தொடர்பிலான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் மீது அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கு முன்னர் இந்நிறுவனங்களுடன் ஆலோசனைகளை நடாத்துதல்

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்திக்கான கொள்கைகள் மற்றும் திட்டகள் மீது அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்

கொள்கைசார்ந்த இடைவெளிகளையும் தேவைகளையும் இனங்காண்பதற்கு விஞ்ஞானிகள், பொறியியளார்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் போன்றோரை திரட்டுதல்

01. இளம் விஞ்ஞானிகள் மன்றம் (YSF)

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப தொடர்புபட்ட பிரச்சினைகள் மீது இலங்கையில் உள்ள இளம் விஞ்ஞானிகள் தமது கருத்துக்களை தெரிவிப்பதற்காக அவர்களுக்கு வாய்ப்பினை வழங்குவதற்காக 2000 ஆண்டு தொடக்கம் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் இலங்கையின் இளம் விஞ்ஞானிகள் மன்றம் நடாத்தப்பட்டு வருகின்றது.

I. இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் வழிநடாத்தற் குழு

இளம் விஞ்ஞானிகள் மன்றமானது 13 உறுப்பினர்களைக் கொண்ட வழிநடாத்தல் குழுவொன்றினை உள்ளடக்குகின்றது. வழிநடாதற் குழுவானது இரு இணைச்செயலாளர்களுடன் சேர்த்து தலைவரொருவரினால் தலைமைமவகிக்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும், வழமையாக இளம் விஞ்ஞானிகள் மன்ற ஆய்வரங்குடன் இடம்பெறுகின்ற வருடாந்த பொதுக் கூட்டத்தின்போது புதிய வழிநடாத்தற் குழுவொன்று தெரிவுசெய்யப்படுகின்றது. கொவிட் 19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காரணமாக வருடாந்த பொதுக் கூட்டம் இடம்பெறாமையினால் 2020 ஆம் ஆண்டுக்காகவும் 2019 வழிநடாத்தற் குழு செயற்பட்டது.

2020 இன் இளம் விஞ்ஞானிகள் மன்ற வழிநடாத்தல் குழு

தலைவர்	கலாநிதி லசந்த வீரசிங்க	விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
இணைச் செயலாளர்	குழு உறுப்பினர் உபநித் லியனாராச்சி	தொழில்நுட்ப பீடம், இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்
இணைச் செயலாளர்	கலாநிதி கசுன் மீகஹகும்பர	தெங்கு ஆராய்ச்சி நிறுவம், லுணுவில
குழு உறுப்பினர்	பேராசிரியர் உசா ஹெட்டியாராச்சி	மருத்துவ விஞ்ஞானங்கள் பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
குழு உறுப்பினர்	கலாநிதி தினேஸ் ஆட்டிகல	பொறியியல் பீடம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம்
குழு உறுப்பினர்	பேராசிரியர் ரங்கிகா ஹல்வதுர	பொறியியல் பீடம், மொரட்டுவைப் பல்கலைக்கழகம்
குழு உறுப்பினர்	கலாநிதி சமந்தா திசாநாயக	விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
குழு உறுப்பினர்	கலாநிதி கந்தையா பகீதரன்	விவசாய பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
குழு உறுப்பினர்	கலாநிதி சமீர சமரகோன்	உயிர்இரசாயன அணு உயிரியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழகம்
குழு உறுப்பினர்	கலாநிதி நிரோசிமா விதானகே	மருத்துவ விஞ்ஞானங்கள் பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
குழு உறுப்பினர்	கலாநிதி ஜனக விஜேசிங்க	விலங்கியல் விஞ்ஞான மற்றும் ஏற்றுமதி விசாய பீடம், இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்
குழு உறுப்பினர்	செல்வி ஈ எம் எஸ் இசங்கா	கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம், கொழுப்பு 7
குழு உறுப்பினர்	திரு என் வை ஜயநாத்	விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு ஒருங்கிணைப்பாளர்	செல்வி திலினி முனகமகே	தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு





வரைபடம் 12 : இளம் விஞ்ஞானிகள் மன்ற வழிநடாத்தல் குழுக் கூட்டம்

II. 9ஆவது வருடாந்த இளம் விஞ்ஞானிகள் மன்ற ஆராய்ச்சி ஆய்வரங்கு 2020

2012 இல் ஆரம்பிக்கப்பட்ட இளம் விஞ்ஞானிகள் மன்ற ஆரய்ச்சி ஆய்வரங்கு, வேறுபட்ட துறைகளில் ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டவை மற்றும் ஆராய்ச்சி ஆர்வங்கள் போன்றவற்றை பகிர்ந்துகொள்ளுதல் ஊடாக கூட்டுமுயற்சி ஆராய்ச்சியினை ஊக்குவிக்கின்ற அதேவேளை வலையமைப்பினை ஏற்படுத்துவதற்காகவும் தொழில்நுட்ப தொழில்முயற்சியாண்மை அபிவிருத்திக்காகவும் இளம் விஞ்ஞானிகளுக்கான தளமொன்றினை வழங்கும் முக்கிய குறிக்கோளுடன் மேலும் பிரபல்யமடைந்துள்ளது.

எண்ணக்கருசார்ந்த கட்டுரைகளுக்கான அழைப்பிற்கு செவிசாய்த்து, 2019 இல் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு இளம் விஞ்ஞானிகள் மன்ற உறுப்பினர்களிடமிருந்து 85 நீடிக்கப்பட்ட எண்ணக்கருசார்ந்த கட்டுரைகள் கிடைக்கப்பெற்றன. ஒவ்வொரு எண்ணக்கருசார்ந்த கட்டுரையும் இரட்டை பொருத்தப்பாட்டு மீளாய்வுச் செய்னமுறையின் கீழ் இரு சிரேஸ்ட விஞஞானிகளால் மதிப்பீடுசெய்யப்பட்டது. அவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில், 52 நீடிக்கப்பட்ட எண்ணக்கருசார்ந்த கட்டுரைகள், வாய்மூல எடுத்துரைப்புக்காக தெரிவுசெய்யப்பட்டன. தெரிவுசெய்யப்பட்ட எண்ணக்கருசார்ந்த கட்டுரைகள் பதிப்பித்தலுக்காக சமர்பிக்கப்பட்டன.

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு, திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜங்க அமைச்சினால் ஏற்பாடுசெய்யப்பட்ட உலக விஞ்ஞான தினம் மற்றும் தேசிய விஞ்ஞான வாரம் ஞாபகார்த்த நிகழ்வுகளுக்கு இணையான ஷும் காணொளி மாநாட்டு வசதி வாயிலாக இணையவழி நிகழ்ச்சியாக 2020 நவம்பர் 13 அன்று அதன் 9 ஆவது இளம் விஞ்ஞானிகள் மன்ற ஆராய்ச்சி ஆய்வரங்கினை ஏற்பாடுசெய்யதது.

இவ்வாய்வரங்கு மெய்நிகர் தளத்தின் வாயிலாக அதிக எண்ணிக்கையிலான அதிதிகளின் பங்கேற்புடன் ஆரம்ப வைபவத்துடன் தொடங்கப்பட்டதுடன் திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜங்க அமைச்சின் செயலாளர், திருமதி பத்மா ராஜபக்ஷ கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றினார். ரைகம் சாம்ராஜ்சியத்தின் தலைவரும்/பிரதம நிறைவேற்று அதிகாரியும் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு உறுப்பினருமான கலாநிதி ரவி லியனகே முக்கிய உரையினை நிகழ்த்தினார். 2018 இளம் விஞ்ஞானி விருதினைப் பெற்ற பேராசிரியர் மெத்திக விதானகே மெய்நிகர் வாயிலாக கலந்துகொண்டவர்களுக்கு அதிதி உரையாற்றினார்.


ஏழு இணையான தொழில்நுட்ப அமர்வுகளில் 51 எண்ணக்கருசார்ந்த கட்டுரைகள் இணையவழியாக எடுத்துரைக்கப்பட்டு ஆய்வரங்கு முன்னெடுக்கப்பட்டது. மெய்நிகர் ஆய்வரங்கிற்கான தொழில்நுட்ப ஆதரவை இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையம் வழங்கியிருந்தது.

தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கட்டமைப்பின் பின்வரும் முக்கிய துறைகளின் கீழ் இணையவழி வாய்மூல எடுத்துரைப்பகள் மேற்கொள்ளப்பட்டன;

- சுகாதாரம்,
- உணவு, போசனை மற்றும் விவசாயம்,
- சுற்றாடல்,
- வலு,
- புடவை மற்றும் ஆடைகள்,
- தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் அறிவுசார்ந்த சேவைகள்,
- அடிப்படை விஞ்ஞானம், வளர்ந்தவருகின்ற தொழில்நுட்பங்கள் மற்றும் சுதேச அறிவு







வரைபடம் 13 : 9 ஆவது இளம் விஞ்ஞானிகள் மன்ற ஆராய்ச்சி ஆய்வரங்கு

II. இளம் விஞ்ஞானிகள் மன்றத்தின் ஆராய்ச்சிக்கான புள்ளிவபரங்கள் தொடர்பான செயலமர்வு

குளியாபிட்டியில் உள்ள இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையத்தில் 2020 சனவரி 30 மற்றும் 31 ஆம் திகதிகளில் "ஆராய்ச்சிக்கான புள்ளிவபரங்கள் தொடர்பான செயலமர்வு" என்ற தலைப்பில் முன்கூட்டிய தொழில்சார் ஆராய்ச்சியாளர்களுக்காக இரண்டு நாள் திறன் அபிவிருத்தி செயலமர்வொன்றினை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் இளம் விஞ்ஞானிகள் மன்றம் ஏற்பாடுசெய்தது. "வெற்றிகரமான தரவுப் பகுப்பாய்விற்கான படிமுறைகள்", "கருதுகோள் பரீட்சித்தல்", "மாதிரியெடுத்தல் மற்றும் பரீட்சார்த்த வடிவமைப்புகள்", வேறுபாடுகளை நோக்குவதற்கான பரிசோதனை" மற்றும் "தரவு கண்டறிவதற்கான தொடர்புகள் மற்றும் பரிசோதனைகள்" ஆகிய விடயப்பரப்புகள் மீது பின்வரும் ஆளணியைக்கொண்டு விரிவுரைகள் மற்றும் செயன்முறைசார்ந்த அமர்வுகளை செயலமர்வு உள்ளடக்கியிருந்தது.

- பேராசிரியர் ஆர் ஓ தட்டில், விடுவிப்பு பேராசிரியர், விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்.

- பேராசிரியர் எஸ் சமித, சிரேஸ்ட பேராசிரியர், விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்.
- பேராசிரியர் என் ஆர் அபேநாயக, பேராசிரியர், வேளாண்வியாபார முகாமைத்துவத் திணைக்களம், இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்.
- கலாநிதி கே டப்லிவ் எல் கே வீரசிங்க, சிரேஸ்ட விரிவுரையாளர், விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்.



வரைபடம் 14 : ஆராய்ச்சிக்கான புள்ளிவபரங்கள் மீதான இளம் விஞ்ஞானிகள் மன்ற செயலமர்வு

IV. சிரேஷ்ட விஞ்ஞானிகள் மன்றம்

சிரேஷ்ட விஞ்ஞானிகள் மன்றம் என்பது இலங்கையிலுள்ள சிரேஷ்ட விஞ்ஞானிகள் மத்தியில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பினை ஊக்குவித்து வலுப்படுத்தி ஈடுபடுத்தி அத்துடன் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் தொடர்புடைய கொள்கைகளை வகுத்து மீளாய்வுசெய்வதில் அவர்களை ஈடுபடுத்தும் குறிக்கோளுடன் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவினால் தொடங்கப்பட்ட மதியுரை மன்றங்களில் ஒன்றாகும். 2001 இல் தொடங்கிவைக்கப்பட்ட சிரேஷ்ட விஞ்ஞானிகள் மன்றமானது 2010 வரை ஒரு தசாப்தமாக செயற்பாடுமிக்கதாக இருந்துவந்தது. எனினும், பல்வேறு தடைகள் காரணாக, சிரேஷ்ட விஞ்ஞானிகள் மன்றம், ஒரு தசாப்தமாக செயற்பாடற்று இருந்ததுடன், தேசிய முன்னுரிமை இலக்குகளை அடைந்துகொள்வதில் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு, தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு 2020 இல் சிரேஷ்ட விஞ்ஞானிகள் மன்றம் மீளவும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்தது.

தொடக்க நிகழ்ச்சித்திட்டமாக, பல்கலைக்கழகங்கள் மற்றும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் இருந்து 125 இற்கும் மேற்பட்ட சிரேஷ்ட விஞ்ஞானிகள்/பொறியியலாளர்கள்/புத்திஜீவிகள் பங்கேற்பதற்கு பதிவுசெய்துள்ள மன்றத்தின் முன்னோக்கிய பாதை பற்றியும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளையும் கலந்துரையாடுவதற்கு அரை நாள் செயலமர்வொன்று 2020 ஒக்டோபர் 16 அன்று நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், 2020 ஒக்டோபர் தொடக்கத்தில் கொவிட்- 19 இன் இரண்டாம் அலை திடீரென தோற்றம்பெற்று பாரியளவில் பொதுமக்கள் ஒன்றுகூடுவதைத் தவிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்ததன் காரணமாக, செயலமர்வு 2021 ஆம் ஆண்டுக்கு பிற்போடப்பட்டது.

சர்வதேச விவகாரங்கள்

அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்திற்கான நிலையம்

1989 ஓகஸ்டிலிருந்து இந்திய அரசாங்கத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட அரசாங்கங்களுக்கிடையிலான நிறுவனமொன்றான அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையமானது (றறற.யெஅளவஉ வ.ழசப)இ விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் தெற்கு-தெற்கு ஒத்துழைப்பினை ஊக்குவிப்பதில் மிகவும் முனைப்புமிக்கதாக விளங்குகின்றது. இலத்தீன் அமரிக்க, ஆபிரிக்க, ஆசிய, மற்றும் ஐரேப்பிய கண்டங்கள் முழுவதும் பரந்துள்ள 47 ஆர்வமிக்க நாடுகளுள் இலங்கையும் ஒன்றாகும். இது, ஏனைய அபிவிருத்திடைந்துவரும் நாடுகளுடன் அணிசேரா நாடுகளின் விஞ்ஞானிகள், தொழில்நுட்பவியலாளர்கள், மற்றும் விஞ்ஞான அமைப்புகள் மத்தியில் பரஸ்பர நலன்களுடன் ஒத்துழைப்பு வசதியினை வழங்குகின்றது.

அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையம், இதுவரையிலும் இலங்கையில் நடாத்தப்பட்ட விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப துறைகளில் அத்தகைய 7 சர்வதேச நிகழ்வுகள் உள்ளடங்கலாக பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் சுமார் 80 சர்வதேச செயலமர்வுகள் மற்றும் பயிற்சிப் பாடநெறிகளை ஏற்பாடுபெய்துள்ளது. இந்நிகழ்வுகள் மூலம் இலங்கையிலிருந்து அதிக எண்ணிக்கையிலானோர் உள்ளடங்கலாக பாரியளவிலான ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழிலசார் நிபுணர்கள் நன்மையடைந்தனர். அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையத்தின் ஆளுகைச் சபைகளின் பணியக கூட்டங்கள் கடந்த 2004, 2010, மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் 3 தடவைகள் இலங்கையினால் நடாத்தப்பட்டன. அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையத்தின் 15 ஆவது ஆளுகைச் சபைக் கூட்டம் இலங்கை, கொழுப்பில் 2020 செப்படம்பரில் இடம்பெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்து, ஆயினும், கொவிட்-19 உலகலாவிய நோய்த்தொற்று காரணமாக அநேகமான உறுப்பு நாடுகளில் நிலவுகின்ற நிலைமையின் காரணமாக அடுத்த ஆண்டுக்கு மீளஆட்டவணைப்படுத்தப்பட்டது.

அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையமானது உறுப்பு நாடுகளினால் ஏற்பாடுசெய்யப்படுகின்ற செயலமர்வுகள், கருத்தரங்குகள், மாநாடுகள் மற்றும் ஏனைய குறுகிய கால அத்துடன் நடுத்தர கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் விஞ்ஞானிகள் மற்றும் ஏனைய அலுவர்கள் பங்கேற்பதற்கு வாய்ப்பினை வழங்குகின்றது. பங்கேற்பவர்களுக்கு நிலையம் விமான பயணச்சீட்டு செலவுகளை வழங்குவதுடன் நடாத்துகின்ற நாடு தங்குமிட வசதிகளை வழங்குகின்றது.

2020 காலப்பகுதியில், நிலையத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட நிகழ்வுகளில் பின்வரும் இலங்கை விஞ்ஞானிகள் பங்கேற்றனர்.

- **ர்வளி மாசாக்கமும் பொதுச் சுகாதாரமும்: சவால்களும் தலையீடுகளும்ò புது தில்லி, இந்திய, 2020. பெப்ரவரி 5-7**

கலாநிதி தமித ஏ எஸ் அநுருத்த, முதன்மை ஆராய்ச்சி விஞ்ஞானி, தேசிய பொறியில் ஆராய்ச்சி மற்றும் அபிவருத்தி நிலையம்.

- **ற்பொதுநிலை மருந்துகள்ற மீதான சரவதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், 2020 நவம்பர் 19 (மெய்நிகர் வழி)**

  கலாநிதி. நயனா விஜேவர்த்தன, சிரேஷ்ட விரிவுரையாளர், விலங்குவைத்திய மருத்துவ விஞ்ஞானம், விலங்கு மருத்துவம் மற்றும் மிருக விஞ்ஞான பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்,

  மற்றும்

  வைத்தியர் கே ஜி ஏ பீ அத்தநாயக, தலைவர் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர், உயிரியல் இரசாயனப் பிரிவு, மருத்துவ பீடம், உருகுணைப் பல்கலைக்கழகம்

- **அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான தொழில்நுட்ப தொழில்முயற்சியான்மை: அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுகக்கான தொழில்நுட்ப மற்றும் வர்த்தகமயப்படுத்தலில் சவால்களும் வாய்ப்புகளும்ற 24-25 நவம்பர் 2020 (மெய்நிகர் வழிமுறை)**

  திருமதி நஸீமா அஹமட், பணிப்பாளர்(திட்டமிடல்), திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜங்க அமைச்சு.

  செல்வி பீ ஏ எம் ஜே விஜேபால, விஞ்ஞானி, தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை.

  கலாநிதி கே டப்லிவ் சுஜீவ ஆரியவங்ச, முதன்மை விஞ்ஞானி, தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை.

கொவிட்-19 நோய்த்தொற்று நிலைமை காரணமாக, 2020 ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்ட அநேகமான அணிசேரா மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்துவருகின்ற நாடுகளின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிலையத்தின் செயலமர்வுகளும் கூட்டிணைவு நிகழ்ச்சித்திட்டங்களும் ஒன்றில் பிற்போடப்பட்டன அல்லது மெய்நிகர்வழியில் இடம்பெற்றன.

மனித வள முகாமைத்துவம்

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கருமங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கு கொள்கை வகுப்பதற்காகவும் மதியுரை வழங்குதற்குமான உச்சமட்ட நிறுவனமொன்றாக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு பதவிகுறிக்கபப்ட்டுள்ளது. மேற்குறித்த கடமைப்பொறுப்பினை நிறைவுசெய்வதற்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவானது நிறுவனசார் இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைந்துகொள்வதற்கான அணியொன்றாக மிக முக்கிய பங்கொன்றினை ஆற்றுவதுடன் நாட்டில் விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தையும் அபிவிருத்தி செய்வதை நோக்கிப் பாபடுகின்றது.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குவின் நிறுவனசார் கட்டமைப்பிற்கு அமைவாக, ஆணைக்குழுவின் பிரதானியாக தலைவர் செயற்படுகின்றார். பணிப்பாளர் பிரதம நிறைவேற்று அலுவலராவார். துறைசார் கொள்கைகள், உபாயத்திட்டங்கள் மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்புரைடய ஆவணங்களை வகுத்து தயாரிப்பதில் சிரேஷ்ட விஞ்ஞானிகள் மற்றும் விஞ்ஞானிகள், ஆரவலர்கள் மற்றும் ஆலாசனை மன்றத்துடன் இணைந்து உதவி, ஒத்துழைப்பு வழங்குகின்றனர். தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் நிதி முகாமைத்துவம், பிரதிப் பணிப்பாளரொருவரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. நிருவாக அலுவலர், இரண்டு நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்- நிதி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தரவுத்தள இணைப்பாளர்), ஒரு வரவேற்பாளரும் தொலைபேசி தொழிற்படுத்துநருடனும் சேர்த்து 5 முகாமைத்துவ உதவியாளர்கள், 2 அலுவலக உதவியாளர்கள், 3 சாரதிகள் ஆகியோரைக் கொண்ட அணி துணையளிக்கின்ற பதவியினரை உள்ளடக்குன்கின்றது. குறிப்பான கடமைகளுக்காகவும் ஒப்படைகளுக்காகவும் தேவையின் அடிப்படையில் ஆணைக்குழுவின் அனுமதியுடன் ஆராய்ச்சி உதவியாளர்களும் ஆலோசகர்களும் வெளியிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றனர்.

2020.12.31 அன்று உள்ளவாறு பதவியினர் பற்றிய தகவல் தொகுப்பு

பதவியினர் வகை	அனுமதிக்கப்பட்ட பதவியணி	தற்போதுள்ள பதவியணி
உயர் முகாத்துவம் (HM 2-3)	01	01
விஞ்ஞானிகள் (AR -2, AR ï 1)	04	03
நடுத்தர முகாமையாளர் (MM)	01	01
கனிஷ்ட முகாமையாளர் (JM)	01	01
முகாமைத்துவ உதவியாளர்கள் (MA ï 3)	02*	02
முகாமைத்துவ உதவியாளர்கள் (MA- 1-2)	05	02
ஆரம்ப நிலை (PL)	05	04

02* நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - நிதி பதவியானது பதவிவகிப்பவருக்கு தனித்துவமானது

அலுவலர் செய்திகள்

- 2020 சனவரி 16 அன்று தொடக்கம் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் தலைவராக பேராசியரியர் ஷனிகா ஹிரிகும்புரேகம அவர்களை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு மகிழ்ச்சியுடன் வரவேற்றதுடன் அவர் இப்பதவியில் 2020 டிசம்பர் 31 வரை பதவிவகித்தார். விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் செலாற்றுகையினை மேம்படுத்துவதற்கு விசேடமாக உள்ளக நிருவாகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அவர் வழங்கிய முனைப்பான பங்களிப்பிற்காக அவருக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம்.

- பேராசிரியர் நிரஞ்சனி ரத்நாயக 2020 டிசம்பர் 31 அன்று ஆணைக்குழு உறுப்பினராக அவரது பதவியிலிருந்து பதவிவிலகியதுடன் ஆணைக்குழு உறுப்பினராக அவரது பதவிக் காலத்தில் வழங்கிய சேவைக்கு அவருக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

- திருமதி நந்தனி சமரவிக்கரம, 2019.06.20 தொடக்கம் 2020.01.26 வரை பதில் பணிப்பாளராக கடமையாற்றினார் அவரது பதவிக் காலத்தில் வழங்கிய சேவைக்கு திருமதி சமரவிக்கரம அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

- கலாநிதி தமாரா எப் டயஸ், 2020.01.27 தொடக்கம் 2020.05.31 வரை பதில் பணிப்பாளராக கடமையாற்றினார் அவரது பதவிக் காலத்தில் வழங்கிய சேவைக்கு கலாநிதி தமாரா எப் டயஸ் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

- திரு கனிஸ்க ஜிம்ஹான் 2020.03.16 அன்று அலுவாக உதவியாளராக அவரது பதவியிலிருந்து பதவி விலகியதுடன் அவரது பதவிக் காலத்தில் வழங்கிய சேவைக்கு ஜிம்ஹான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

- கலாநிதி கல்ப டப்லிவ் சமரகோன் 2020.12.21 அன்று சிரேஸ்ட விஞ்ஞானியாக அவரது பதவியிலிருந்து பதவி விலகியதுடன் அவரது பதவிக் காலத்தில் வழங்கிய சேவைக்கு விசேடமாக கொரிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை நிறுவனத்தின் கருத்திட்டத்தை ஒருங்கிணைத்தமைக்கு அவருக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

இயலளவு விருத்தி.்.உள்ளக மற்றும் வெளியிடப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

நாட்டில் கொவிட் -19 உலகலாவிய நோய்த்தொற்று நிலைமை காரணமாக அரசாங்கத்தினால் விடுக்கப்பட்ட சுகாதார வழிகாட்டல்களைத் கருத்திற்கொண்டு, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் அட்டவணைப்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பிற்போடப்பட்டன.

நலநோம்புகைச் செயற்பாடுகள்

2020 ஆம் ஆண்டின்போது தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் நலநோம்புகைச் சங்கத்தினால் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களும் நிகழ்வுகளும் நடாத்தப்பட்டன.

கிரமமான செயற்பாடுகள்

சிங்கள, தமிழ் புத்தாண்டுக்காக ஒவ்வொரு அலுவலருக்கும் ரூ. 25,000 தொகையுடைய குறைந்த வட்டி கடன் வசதி வழங்கப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டங்கள்

NASTEC அச்சிடப்பட்ட ரிசேர்ட்டுக்கள் அலுவலர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

வெளிநாட்டுப் பயிற்சி.்.செயலமர்வுகள்.்.கருத்தரங்குகள்.். ஆய்வரங்குகளில் பங்கேற்றல்

கொவிட் 19 உலகலாவிய நோய்த்தொற்று காரணமாக நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

நிதியியல் கூற்றுகள்

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு
நிதியியல் நலைக்கூற்று
2020 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு
(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன)

	குறிப்பு	2020	2019
சொத்துகள்			
நடைமுறைச் சொத்து			
காசு மற்றும் காசுக்கு சமமானவை	1	2,203,844	2,365,493
பதிவேட்டுப்பொருட்கள்/கையிருப்புகள்	2	81,905	93,110
முற்கொடுப்பனவுகள்	3	19,009	128,513
அலுவலர் கடன்கடன் -குறுகிய காலம்	4	223,195	225,792
		2,527,953	**2,812,908**
நடைமுறையற்ற சொத்துகள்			
ஆதனம், பொறித்தொகுதி, உபகரணங்கள்	5	1,690,478	5,087,612
மீளளிக்கத்தக்க வைப்புகள்	6	75,500	260,670
அலுவலர் கடன்கடன் -நீண்ட காலம்	7	264,948	425,511
		2,030,926	**5,773,793**
மொத்த சொத்துகள்		**4,558,879**	**8,586,701**
பொறுப்புகள்			
நடைமுறைப் பொறுப்புகள்			
அட்டுறு செலவுகள்	8	7,330,862	5,508,452
நடைமுறையற்ற பொறுப்புகள்			
பிற்போடப்பட்ட வருமானம்	9	783,915	1,444,461
பணிக்கொடைக்கான ஏற்பாடு	10	4,002,944	3,489,111
		4,786,859	**4,933,572**
மொத்த பொறுப்புகள்		**12,117,721**	**10,442,024**
மொத்த தேறிய சொத்துகள்		**(7,558,842)**	**(1,855,323)**
தேறிய சொத்துகள்/பங்குரிமை மூலதனம்			
ஒன்றுசேர்க்கப்பட்ட நிதியம்		1,907,071	1,907,071
மீள்மதிப்பீட்டு மிகைகள்		3,763,824	6,159,307
ஒதுக்கு		(13,229,737)	(9,921,701)
மொத்த தேறிய சொத்துகள்/பங்குரிமை மூலதனம்		**(7,558,842)**	**(1,855,323)**

01 முதல் 01 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் 07 முதல் 12 வரையான பக்கங்களிலுள்ள குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுகளின் இன்றியமையாத பாகங்களாகும். இந்நிதியியல் கூற்றுகளை தயாரிப்பதும் எடுத்துரைப்பதும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பொறுப்பாகும். இந்நிதியியல் கூற்றுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் அனுமதிக்கப்பட்டு அவர்கள் சார்பில் ஒப்பமிடப்பட்டதாகும்.

(ஒப்பம்)
தலைவி
(2020 சனவரி 17 தொடக்கம் 2020 டிசம்பர் 31 வரை)
2021 ஏப்ரல் 01 அன்று பரிஸில் வைத்து ஒப்பமிடப்பட்டது

(ஒப்பம்)
பதில் பணிப்பாளர்

(ஒப்பம்)
நிருவாக அலுவலர்

(ஒப்பம்)
ஆணைக்குழு உறுப்பினர்

வரைபடம் 15 : நிதியியல் நிலைக் கூற்று

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு
நிதியியல் செயலாற்றுகைக் கூற்று
2020 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு
(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன)

	குறிப்பு	2020	2019	குறிப்பு
வருவாய்				
மீண்டெழும் அளிப்பு		25,264,065		25,579,500
மூலதன அளிப்பு – ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி		1,096,000		3,160,500
மூலதன அளிப்பு - இயலளவு விருத்தி			-	430,000
அரசாங்க அளிப்பின் பெறுமதிக் குறைப்பு		3,056,029		4,317,572
வருமானம்	11	101,358		111,538
		29,517,452		**33,599,110**
செலவுகள்				
ஆள்சார் வேதனாதிகள்	12	13,361,306		14,092,911
பிரயாணக் கொடுபட்பனவு	13	15,531		461,916
வழங்கல் மற்றும் பயன்படுத்தப்பட்ட நுகர்பொருட்கள்	14	320,496		675,097
பராமரிப்பு	15	677,742		1,875,013
ஒப்பந்த சேவைகள்	16	6,663,219		9,655,675
மாற்றல்கள்	17	4,443,935		4,335,387
இயலளவு விருத்தி	18		-	439,225
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	19	2,948,607		2,932,708
கூட்டச் செலவுகள்	20	997,519		161,471
பெறுமானத் தேய்வு மற்றும் பெறுமதிக் குறைப்பு செலவுகள்	5	3,056,029		4,317,572
மொத்த செலவுகள்		**32,484,384**		**38,946,975**

தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து மிகை/ (பற்றாக்குறை)	**(2,966,932)**	**(5,347,865)**
நிதிச் செலவுகள்		
ஆதனம், பொறித்தொகுதி, உபகரண விற்பனை மீதான பெறுகைகள்	(341,104.00)	-
காலத்திற்கான தேறிய மிகை/(பற்றாக்குறை)	**(3,308,036)**	**(5,347,865)**

வரைபடம் 16 : நிதியியல் செயலாற்றுகைக் கூற்று

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

TEC/B/NASTEC/1/20/23 2021 ஓகஸ்ட் 20

தலைவர்
தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2020 டிசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

---

1. நிதியியல் கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதியியல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கி 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்துடன் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. அரசியலமைப்பின் 154(6)ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அபிப்பிராயத்தின்படி, எனது அறிக்கையில் தகைமைபெற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பிரிவில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்திற்கானவை தவிர, ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிதியியல் கூற்றுகள் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதியியல் நிலைமை அல்லது நிதியியல் செயலாற்றம் மற்றும் காசுப்பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு அமைவாக உண்மையான மற்றும் நியாயமான நிலைமையொன்றினைப் பிரதிபலிக்கின்றன.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

அரசாங்க சேவைக் கணக்கீட்டு நியமங்கள் இலக்கம் 7 இன் 65 ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய, ஏதேனும் சொத்தின் நிலுவையாகவுள்ள பெறுமதியும் பயன்பாட்டு ஆயுட்காலமும் இலங்கை ஒவ்வொரு ஆண்டறிக்கையிடும் காலப்பகுதியின் குறைந்தது இறுதி நாளன்று மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் நிறுவனமானது சொத்துகளின் ஆயுட்காலத்தினை நியாயமாக மதிப்பீடு செய்திருக்கவில்லை என்பதுடன், பூச்சிய பெறுமதியுடனான ரூபா. 2,226,336 செலவுடைய சொத்துக்கள் அதன் பின்னரும் கூட பயன்பாட்டில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்நோக்கத்திற்காக அச்சொத்துகளுக்கென தேய்மானப் பெறுமதி எதுவும் கணிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் நடப்பாண்டின் மிகை அதன் சேர்த்தலுடன் மிகைத்துக் கூறப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது தகைமைபெற்றி அபிப்பிராயத்திற்கான

அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 ஆண்டறிக்கை - 2020 இல் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்கள் என்பது கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு கையளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள ஆணைக்குழுவின் ஆண்டறிக்கை 2020 இல் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் எனப் பொருள்படும். என்பதுடன் எவ்வாறாயினும் விடயத்தின் மீது எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாதவையாகும். இவ் வேறு தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புடையதாகும்.

வேறு தகவல்கள் நிதியியல் கூற்றுகள் மீதான எனது அபிப்ராயத்தினால் உள்ளடக்கப்படவில்லை அத்துடன் அதன் மீது ஏதேனும் சான்றினை நான் செய்யவுமில்லை அபிப்ராயத்தினை வெளிப்படுத்தவுமில்லை.

நிதியியல் கூற்றுகள் மீதான எனது கணக்காய்வின் நியதிகளுக்குமைய எனது பொறுப்பானது கிடைக்கப்பெறுகின்ற போது மேலே இனங்காணப்பட்ட வேறு தகவல்களை வாசிப்பதும், வேறு தகவல்கள், நிதியியல் கூற்றுகளுடன் அல்லது கணக்காய்வில் அல்லது ஏதேனும் வேறு வடிவத்தில் சேகரிக்கப்பட்ட எனது அறிவுடன் பொருண்மையாக இணங்கவில்லையா என்பதனை பரிசீலிப்பதாகும்.

ஆண்டறிக்கை 2020 பொருண்மையாக பிறழ்வுக் கூற்றுகளை உள்ளடக்குகின்றது என் ஆண்டறிக்கை பற்றி எனது வாசிப்பில் நான் தீர்மானித்திருப்பின், அத்தகவல்கள் உரிய சீராக்களுக்காக நிர்வாக அதிகாரிகளுக்கு அறிவிக்கப்படல் வேண்டும். பிறழ்வுக் கூற்றுகள் மேலும் சீர்செய்யப்படாதிருப்பின் அரசியல் யாப்பின் 154(6) ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவாக காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

1.4 நிதியியல் கூற்றுகள் மீதான முகாமைத்துவத்தினதும் நிரவாகத்தினதும் பொறுப்புக்கள்

இலங்கை அரசாங்க கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கி இந் நிதியியல் கூற்றுகளை தயாரித்தலை இயலச்செய்வதற்கு தேவையான உள்ளக நிர்வாகத்தினையும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான தவறுக் கூற்றுகளின்றி அவற்றை நியாயமாக எடுத்துரைப்பதனையும் தயாரிப்பதனையும் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியியல் கூற்றுகளை தயாரிப்பதில் ஆணைக்குழு தொடர்ச்சியான இயங்குவதற்கும் ஆணைக்குழுவினை தீர்த்துக் கட்டுவதற்கு முகாமைத்துவம் உத்தேசிக்கின்ற போது அல்லது மாற்று வழியொன்று காணப்படாத போது அவ்வாறு செய்வதற்கு உத்தேசிக்கின்ற போது தவிர தொடர்ச்சியான அடிப்படையில் கணக்குகளைப் பேணுவதற்கும் ஆணைக்குழுவின் தொடர்ச்சியுடன் தொடர்புடைய விடயங்களை வெளியிடுவதற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் அறிக்கையிடும் செயன்முறையினை பரீட்சிப்பதற்கும் நிருவாகத் தரப்பினர் பொறுப்புடையவராவர்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் நியதிகளுக்கு அமைய ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையினையும் உரிய காலத்தில் நிதியியல் கூற்றுகளையும் தயாரிப்பதனை இயலச்செய்கின்ற விதத்தில் அதன் வருவாய், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் முறையாகப் பேணப்படல் வேண்டும்.

1.5 நிதியியல் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து ஒட்டுமொத்தமாக நிதியியல் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாகக் காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதியியல் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாகக் கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வு முழுவதன் போதும் நான் தொழில்சார் நிபுணத்துவ கருதுகோள்களையும் தொழில்சார் நிபுணத்துவ தீர்மானத்தையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதியியல் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான இடர்நேர்வுகளை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்நேர்வுகளை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக்கொள்வது சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு ஆணைக்குழுவின் ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாகக் காணப்படாதிருக்கையில், நிதியியல் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்குக் காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதியியல் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதியியல் கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

ஏனைய விடயங்களிடையே, கணக்காய்வின் திட்டமிடப்பட்ட செயற்பரப்பு மற்றும் காலம் மற்றும் என்னுடைய கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுளிலுள்ள ஏதாவது முக்கிய குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வு காண்புகள் தொடர்பாக ஆளுகைக்குப் பொறுப்பானவர்களுக்கு நான் தெரிவிக்கின்றேன்.

2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் ரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், பின்வரும் தேவைப்பாடுகளிற்காக விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன:

2.1.1 கணக்காய்விற்கு அவசிமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவினால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

2.1.2 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii)ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv)ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள்

முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

2.2 மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமை காரணமாக பின்வரும் கூற்றுகளை மேற்கொள்வதில் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை:

2.2.1 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வியாபாரச் செயற்பாடுகளிற்கு வெளியே ஆணைக்குழு செய்துகொண்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் ஆணைக்குழுவின் ஆளுகைச் சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

2.2.2 2018இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம், பின்வரும் அவதானிப்புகள் தவிர ஏதேனும் தொடர்புடைய ஏழுதப்பட்ட சட்டத்திற்கு அல்லது ஏதேனும் வேறு பொதுவான அல்லது ஆணைக்குழுவின் ஆளுகைச் சபையினால் வழங்கப்பட்ட விசேட ஏற்பாடுகளுக்கு முரணாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையைக் குறிப்பிடுதல்.

விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் / பணிப்புரைகளுக்கான தொடர்பு	**அவதானிப்புகள்**
(அ) நிதியியல் ஒழுங்குவிதி 133	ஆணைக்குழுவின் கடமைகளை பரீட்சிப்பதற்கு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டும். என ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் ஆணைக்குழு இவ் ஏற்பாடுகளை கடைபிடிக்கவில்லை.
(ஆ) 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி சட்டத்தின் 5(ஆ) பிரிவு	அரசாங் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தின் பயன்பாடு அத்துடன் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நடவடிக்கைகள் என்பன மீது மீளாய்வு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டிற்கான அறிக்கை 2021 யூலை 15 அளவிலும் கூட சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(இ) 2003 யூன் 02 இன் பீஈடி 12 ஆம் இலக்க அரசாங்கத் தொழில் முயற்சி சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தி.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் குறைந்தது ஒருதடவையேனும் கூட்டப்பட வேண்டிய போதிலும் 2020 ஆண்டு காலப் பகுதியில் கணக்காய்வுக் குழு ஒரேயொரு கூட்டத்தினை மாத்திரம் நடாத்தியுள்ளது.
(ஈ) திறைசேரிக்கா செயலாளரின் 2010 டிசெம்பர் 10 இன் 1/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1(உ) பிரிவு	அரசாங்க தொழில் முயற்சிகளின் கல்விசாரா அலுவலர்களில் சிரேஷ்ட மட்டப் பதவியிலுள்ள நிறைவேற்று அலுவலர்களும் 12 வருடங்களைக் கொண்ட சேவைக் காலத்தினை பூர்த்திசெய்துள்ள பல்கலைக்கழகங்களிலுள்ள அலுவலர்களும் தீர்வையற்ற வாகன அனுமதிப்

பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவர்களாவார்கள் என குறித்துரைக்கப்பட்டுள்ள போதிலும், தீர்வையற்ற அனுமதிப்பத்திரமொன்றின் மீது 2011 யூன் 08 அன்று ஆணைக்குழுவின் பணிப்பாளர் வாகனம் ஒன்றினை இரக்குமதி செய்துள்ளமை அவ் ஏற்பாட்டிற்கு முரணானதாகும். எவ்வாறாயினும், அவரது நியமனத் திகதி 2003 யூலை 31 ஆகவிருந்ததுடன், தீர்வையற்ற வாகன இரக்குமதி திகதியளவில் அவரது சேவை 8 வருடங்களைக் கொண்டதாகவிருந்தது. மீளாய்விற்கு உட்படுகின்ற ஆண்டின் இறுதியளவிலும் கூட முறைசார்ந்த விசாரணையினை மேற்கொள்வதற்கு மற்றும் ஒன்றில் ஒழுக்காற்று நடவடிக்கையொன்றினை எடுப்பதற்கு அல்லது பொறுப்புவாய்ந்த அலுவலர்களிடமிருந்து அரசாங்கத்திற்கேட்பட்ட நட்டத்தினை அறவிடுவதற்கு ஆணைக்குழு தவறியுள்ளது.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்படுத்தலுக்கு அமைவாக ஆணைக்குழுவின் அதிகாரங்களுக்கு, கடமைகளுக்கு மற்றும் தொழிற்பாடுகளுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும்.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவிற்கு அமைவாக சபையின் சொத்துகள் தொடர்புடைய விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தொடர்புடைய காலப்பகுதியின் போது சிக்கனமாகவும், வினைத்திறன்மிக்கதாகவும், செயல்திறன்மிக்கதாகவும், பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்றும்.

ஒப்பம் : டப்.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

NASTEC/09/Audit

21.10.2021

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

தேசிய கணக்காய்வாளர் காரியாலயம்

இல. 72/306

பொல்துவ வீதி,

பத்தரமுல்லை.

ஐயா,

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2020 டிசெம்பர் 31 அன்று முடிவுற்ற ஆண்டிற்கான நிதியியல் கூற்றுகள் மீதான தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் நியதிகளுக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்களும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளும்.

நீங்கள் அனுப்பிய 2021 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய TEC/B/NASTEC/1/20/23 ஆம் இலக்க மேலே சொல்லப்பட்ட அறிக்கைக்கான விளக்கங்கள் பின்வருமாறு:

2.2.2

(அ) MTR/2/14/NASTEC/Car/Vol II ஆம் இலக்க 2020.08.11 ஆந் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு அலுவலர்கள் அறிவிக்கப்பட்டிருந்தனர். அதற்கமைய, நிறுவனத்தில் உள்ள அலுவலர்களின் எண்ணிக்கையினை காலக்கிரமத்தில் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், உள்ளகக் கணக்காய்வாளர் பதவியினை உள்ளடக்குவதற்கும் எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது.

(ஆ) 2020 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் நோய்ப்பரவல் காரணமாக 2019 ஆம் ஆண்டிற்கான தகவல் சேகரிப்பு எதிர்ப்பார்க்கப்பட்ட காலத்தை விட தாமதமாகியது. இதன் விளைவாக 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளுக்கான தரவுகள் 2021 ஆம் ஆண்டில் சமகாலத்தில் சேகரிக்கப்பட்டு வருவதுடன், காலக்கிரமத்தில் இப் பணியினை நிறைவுசெய்வதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

(இ) ஆண்டின் முதலாம் மற்றும் இரண்டாம் காலப்பகுதியில் கொவிட் நோய்ப் பரவலுக்கு மத்தியில் அரசாங்க சுகாதார ஒழுங்குவிதிகள் மற்றும் அறிவுறுத்தல்கள் காரணமாக 2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் குழுக் கூட்டம் இடம்பெறவில்லை. எனினும், மூன்றாம் காலாண்டுக்கான கூட்டம் 2020 யூலை 28 அன்று இடம்பெறற்றது. இறுதிக் காலாண்டுக்கான கூட்டம் டிசெம்பர் மாதத்தில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கொவிட் நோய்ப்பரவல் மீண்டும் தோற்றம்பெற்றதன் காரணமாக அது இடம்பெறவில்லை.

(ஈ) இவ் விடயம் பற்றி தேடிப்பார்ப்பதற்கு பூர்வாங்க விசாரணையொன்று இடம்பெற்றதுடன், தொடர்புடைய அலுவலர் அதன் பரிந்துரைகளின் மீது தொடர்புடைய அலுவலர் 2020 யூலை 01 அன்று கொடுப்பனவின்றி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். குற்றச்சாட்டு பத்திரமும் வழங்கப்பட்டுள்ளது. பூர்வாங்க விசாரணையினைத் தொடர்ந்து முறைசார் ஒழுக்காற்று விசாரணையும் நடாத்தப்பட்டு வருகின்றதுடன், அது நிறைவுபெற்றதன் பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒப்பம் : நஸீமா அஹமட்

பதில் பணிப்பாளர்

தலைவருக்காக